**செய்தி வெளியீடு எண்:785** **நாள்:31.12.2012**

<u>பத்திரிக்கை செய்தி</u>

புதுதில்லிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக்கழகம், பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தபட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சேர்ந்த ஆண்/பெண் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்காக சென்னை அண்ணாநகரில் உள்ள நடேசன் இன்ஸ்டியூட் ஆப் கோ-ஆப்ரேடிவ் மேனேஜ்மெண்ட் நிறுவனத்தின் (மத்திய அரசு நிறுவனம்) மூலம் கட்டணமின்றி Retail Management பயிற்சி நடத்த உள்ளது.

| | |
|---|---|
| பயிற்சியின் கால அளவு | ஐந்து நாட்கள் |
| கல்விதகுதி | 12-ம் வகுப்பு தேர்ச்சி |
| வயது | 18 முதல் 35 வரை |
| குடும்ப ஆண்டு வருமானம் | நகர்புறங்களில் ரூ.1,03,000/-<br>கிராமபுறங்களில் ரூ.81000/- |

இப்பயிற்சியில் சேர விரும்பும் சென்னை, திருவள்ளூர்/காஞ்சிபுரம் மாவட்டங்களை சேர்ந்த தகுதிவாய்ந்த விண்ணப்பத்தாரர்கள் நெ.735, அண்ணா சாலை, எல்.எல்ஏ கட்டிடம், (3-வது தளம்), சென்னை–600 002 முகவரியில் அமைந்துள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில் 09.01.2013 மற்றும் 10.01.2013 ஆகிய தேதிகளில் கல்வி, சாதி மற்றும் வருமானசான்றுகளுடன் நேரில் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதுகுறித்து மேலும் தகவலறிய கீழ்க்கண்ட தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

044-26210423
044-28520144
044-28520422

மின் அஞ்சல் : icmChennai@sify.com
tabcedco@gmail.com

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்
பொருளாதார மேம்பாட்டுக் கழகம்
சென்னை-2

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**